# எதிர்ச்சொற்களை அறிமுகப்படுத்துதல்

**கற்றல் நோக்கங்கள்:**

- படங்களை உற்றுநோக்கி அவற்றைப் பற்றிப் பேசும் திறனைப் பெறுவர்.
- சொற்கள், சொற்றொடர்களை முறையாக உச்சரிக்கும் திறனைப் பெறுவர்.
- சொற்களின் ஒலிவடிவ, வரிவடிவத் தொடர்புகளை இனங்காண்பர்.
- பாடமுடிவில் மாணவர்கள் எதிர்ச்சொற்களை அறிந்துகொள்வர்.
- எதிர்சொற்களைப் புரிந்துகொண்டு வாக்கியத்தில் அமைத்துப் பேச / எழுதக் கற்றுக்கொள்வர்

**தேவையான கற்றல் வளங்கள்:**

1. எதிர்ச்சொற்களைப் படங்களுடன் விளக்கக்கூடிய சொற்பட வளம்.
2. எதிர்ச்சொற்களின் பொருளை எடுத்துக்காட்டி எளிதாக விளக்கக்கூடிய பெரிய/சிறிய, குண்டு/ஒல்லியான சிறிய பொருள்கள்.

**கற்றல் கற்பித்தல் செயல்பாடு** : 1

***'எதிர்ச்சொல்' என்பதற்கான பொருளை மாணவர்களை உணரவைத்தல்***.

**ஆசிரியர்:** நம் உடலில் தலை எங்கு உள்ளது ? கால் விரல்கள் எங்கு உள்ளன? சொல்லுங்கள் பார்ப்போம்.

**மாணவர்:** இங்கே உள்ளது. தலையையும் விரல்களையும் சுட்டிக்காட்டுவர் (or) மேல், கீழ் என்ற சொற்களைப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர்:** நம் உடலில் தலை 'மேலே' உள்ளது, கால் விரல்கள் நம் உடலின் 'கீழே' உள்ளன. மேல் – கீழ் ஆகியவை எதிர்ச்சொற்கள் ஆகும்.

இவை இரண்டில் எது பெரிய பென்சில்? எது சிறிய பென்சில்? (இரண்டு வெவ்வேறு உயரமுள்ள பென்சில்களைக் காண்பிக்க வேண்டும்)

**மாணவர்கள்**: "இது பெரியது, அது சிறியது." பெரிய பென்சிலையும் சிறிய பென்சிலையும் சுட்டிக்காட்டுவர்.

**ஆசிரியர்**: "பெரிய – சிறிய ஆகியவை எதிர்ச்சொற்கள் ஆகும். நீங்கள் கூறிய 'இது–அது' ஆகியவை கூட எதிர்ச்சொற்கள் தாம். நீங்கள் எப்பொழுது தூங்குவீர்கள்? எப்பொழுது பள்ளிக்கு வருவீர்கள்?"

**மாணவர்கள்**: "இரவில் தூங்குவோம். பகலில் பள்ளிக்கு வருவோம்." (நைட்/ராத்திரி/டே டைம் என்று மாணவர்கள் கூறலாம்)

**ஆசிரியர்**: "ஆம். நீங்கள் இரவில் தூங்குவீர்கள். பகலில் பள்ளிக்கு வருவீர்கள். பகல்-இரவு ஆகிய இரண்டும் எதிர்ச்சொற்கள் ஆகும்."

**கரும்பலகையில்:**

எதிர்ச்சொற்களை இணைத்து ஒவ்வொரு முறை மாணவர்களுக்கு அறிமுகம் செய்தவுடன் உடனடியாக அவற்றைக் கரும்பலகையில் எழுதவும்.

***மேல் - கீழ்***
***பெரியது - சிறியது***
***இது - அது***
***பகல் - இரவு***

**கற்றல் - கற்பித்தல் செயல்பாடு - 2**

***எதிர்ச்சொற்களைப் படங்களுடன் இணைத்துக் கற்பித்தல்***

**ஆசிரியர்**: மாணவர்களை சிறு சிறு குழுக்களாகப் பிரித்து சொற்பட வளங்களை மாணவர்களுக்கு வழங்குவார். ஆசிரியர் ஓரிரு முறை அனைத்துச் சொற்களையும் வரிசைப்படி படித்துக்காட்டுவார், பின் படங்களையும் சொற்களையும் இணைத்துப் பொருள் புரியுமாறு படித்துப்பார்க்கச் சொல்வார்.

**ஆசிரியர்**: "எது பெரியது? எது சிறியது? எது மேல்? எது கீழ்? எது குளிர்? எது வெப்பம்?" – இந்தக் கேள்விகளை ஒவ்வொரு குழுவினருக்குள்ளும் மாற்றி மாற்றிக் கேட்டுக்கொள்ளுங்கள்.

**மாணவர்**: ஆசிரியரைப் பின்பற்றி சொற்பட வளத்தில் உள்ள சொற்களின் உதவியுடன் மாணவர்கள் சிறு சிறு வினாக்களை எழுப்புவர்? குழுவினர் எது பெரியது ? எது சிறியது ? என சுட்டிக்காட்டுவர்.

### கற்றல் கற்பித்தல் செயல்பாடு - 3

***மாணவர்கள் படங்களை விவரித்தல் மற்றும் வாசித்தல்.***

**ஆசிரியர்**: சொற்பட வளம் – 2 ஐக் சுட்டிக்காட்டி மாணவர்களிடம் பட விவரிப்புச் சொற்றொடர்களைப் படிக்கச் சொல்வார். மேலும், படங்களைத் தங்களது சொந்தச் சொற்களால் விவரிக்கச் சொல்வார்.

**மாணவர்கள்**: மாணவர்கள் விவரிப்புச் சொற்றொடர்களை வாசிப்பர் & விவரிப்பர்.

**கரும்பலகையில்**:

மாணவர்கள் விவரிப்பவற்றை ஆசிரியர் உடனுக்குடன் சிறிய சொற்றொடர்களாக மாற்றிக் கரும்பலகையில் எழுதுவார்.

**கற்றல் - கற்பித்தல் - மதிப்பீடு**:

ஆசிரியர், பயிற்சித்தாளை மாணவர்களிடம் வழங்கி, உரிய வழிமுறைகளைக் கூறி சரியான எதிர்ச்சொற்களை நிரப்பவும், பொருத்தவும் மாணவர்களை வழி நடத்துவார்.